சீர்கேடான நிலையிலேயே இருக்கின்றது என்பதை அவைக்குத் தெரிவித்து, அது சரிசெய்யப்படுமா என்பதை நம்முடைய பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கராபுரம் அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக் கூடம் உரிய வகையில் சீரமைக்கப்பட்டுள்ளது. மேலும், போதிய மின் விளக்குகள் பொருத்தும் பணி நடைபெற்று வருகிறது. கூடிய விரைவில் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும். தற்சமயம் சங்கராபுரம் அரசு மருத்துவமனையில் 7 செவிலியர்களும், போதுமான அடிப்படை ஊழியர்களும் பணிபுரிந்து வருகிறார்கள். மேலும், தேவைகளைக் கண்டறிந்து போதிய செவிலியர்களும், அடிப்படைப் பணியாளர்களும் பணியமர்த்தப்படுவார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 252, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

252—

குடமுழுக்கு

***7348—திரு. வி.எஸ். இராஜி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யூர் தொகுதி, இலத்தூர் ஒன்றியம், செங்காட்டூரிலுள்ள அருள்மிகு தாயாரம்மாள் சென்னகேசவப் பெருமாள் கோயிலைப் புனரமைத்து, குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

2012 மே 10]

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம், செங்காட்டூர் கிராமம், அருள்மிகு சென்னகேசவப் பெருமாள் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில் ஆகும். திருக்கோயிலைச் சீரமைத்து குடமுழுக்கு நடத்த உத்தேசமாக ரூபாய் 20 இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கான நிதிவசதி திருக்கோயிலில் இல்லை. இந்தத் திருப்பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூபாய் 10 இலட்சம், துறையின்மூலம் வழங்கப்படும். மேலும், ரூபாய் 10 இலட்சம் உபயதாரர்கள்மூலம் பெறப்பட்டு, விரைவில் திருப்பணி வேலைகள் தொடங்கப்பட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் குடமுழுக்கு நடத்தப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி அவர்கள்.*

திரு. வி.எஸ். இராஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கேட்டதும் கொடுப்பவனே கிருஷ்ணா, கிருஷ்ணா' என்ற பாடல் வரிகளுக்கு இணங்க, மனித உயிர்களுக்கெல்லாம் ஒரு பாதிப்பு என்று சொன்னால், நம் இறைவனிடம் முறையிடுகின்றோம். ஆனால், அந்த இறைவனே வாழ்வதாக நினைத்துக் கொண்டிருக்கிற இந்தத் திருக்கோயில்களெல்லாம் சிதைந்து இருக்கிறதென்றால் நம் அம்மாவிடம்தான் முறையிட வேண்டுமென்ற நோக்கத்திலே, இன்றையதினம், செய்யூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இலத்தூர் ஒன்றியம், செங்காட்டூர் கிராமத்திலுள்ள அருள்மிகு தாயார் அம்மாள் சென்னகேசவப் பெருமாள் கோயில் 42 ஆண்டுகளுக்கு முன்பு குடமுழுக்கு செய்யப்பட்ட கோயில். இந்தக் கோயில் இப்போது சிதைவுண்டு இருக்கிறது. அந்தக் கோயிலைப் புனரமைத்துக் குடமுழுக்குச் செய்ய மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கீடு செய்து தந்தமைக்கு நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். மீதமுள்ள ரூபாய் 10 இலட்சத்தை உபயதாரர்கள் வாயிலாகப்*

பெற்று, இத்திருக்கோயிலுக்கு குடமுழுக்கு செய்ய ஆணை பிறப்பித்த அம்மா அவர்களுக்கு என் தொகுதி மக்களின் சார்பாக நன்றி சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. தகவல் கோரல்

(அ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

திரு. ம. கலை அரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Please sit down. *இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர்களுடைய பதிலுரை இருக்கின்ற காரணத்தினால் நேரமில்லை. (குறுக்கீடு)* Please sit down. *திரு. ம. கலை அரசு, உட்காருங்கள். நீங்கள் என்னுடைய அறைக்கு வந்து இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள்.* It is under my consideration. Please sit down. *(குறுக்கீடு) உட்காருங்கள். நாளை எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.* Please sit down. *(குறுக்கீடுகள்) திரு. ம. கலை அரசு, உங்களுக்கு நான் மைக் கொடுக்கவில்லை. நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. ஒரு நிமிடம் நான் சொல்வதைக் கேளுங்கள். இதுகுறித்து என்னிடத்தில் நேற்றுதான் அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். நான் அதுபற்றி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்றிருக்கிறேன்.* It is under my consideration. *(குறுக்கீடு) அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது. அது பின்னர் எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்கிறேனே தவிர, அதை நான் நிராகரிக்கவில்லை. நாளைக்கோ அல்லது நாளை மறுநாளோ, வசதிக்குத் தகுந்தவாறு எடுத்துக்கொள்ளப்படும்.* Please sit down. *(குறுக்கீடு) இதற்குமேல் நீங்கள் எழுந்து நின்று கொண்டிருப்பது முறையல்ல. (குறுக்கீடு) பின்னர் எடுத்துக்கொள்ளப்படும் என்று நான் சொல்கிறேன். என்னை வேறு என்ன சொல்லச் சொல்கிறீர்கள்?*